(அ) ஜல்லிக்கட்டை மீண்டும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திருமதி விஜயதரணி, நீங்கள் என்ன ஜல்லிக்கட்டைப்பற்றிக் கேட்கப் போகிறீர்களா?*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உலகப் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டு நடத்த தமிழக அரசு அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க விரும்புகின்றேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை, உட்காருங்கள்.*

முற்பகல் 11—30

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களுடைய பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு குறித்து மத்திய அமைச்சர் அவர்கள், தமிழக அரசு அவசரச் சட்டம் நிறைவேற்றலாம் என்ற ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்கள். அதுகுறித்த தெளிவுரை தேவை. அந்த ஜல்லிக்கட்டை மிக விரைவில் இந்த ஆண்டே நடத்துவதற்கான நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜல்லிக்கட்டைப்பற்றிப் பேசுவதற்கு காங்கிரசுக்கோ, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ எந்தவித அருகதையும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) திருமதி விஜயதரணி எழுந்து, ஆளோடு ஆளாக அவரும் ஜல்லிக்கட்டைப் பற்றி இங்கே பேசுகிறார்கள். ஆனால், காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சியில் இருக்கும்போதுதான், காளைகளை காட்சிப் பட்டியலிலே சேர்த்தது என்பதனை மாண்புமிகு விஜயதரணி அவர்கள் வசதியாக மறந்திருந்தாலும், நான் அதை நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, ஜல்லிக்கட்டைப்பற்றிப் பேசுவதற்கு எவ்வித தார்மீக உரிமையும் அவருக்கு இல்லை. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வளவுதான். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை,*

2016 ஜனவரி 21] [பேரவைத் தலைவர்]
மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், திருமதி விஜயதரணிக்கு தான் சொல்லியிருக்கிறார். உங்களைச் சொல்லவில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் ஒரே பதில். ஜல்லிக்கட்டை தமிழ்நாட்டில் நடத்துவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டபூர்வ நடவடிக்கை எடுப்பதற்கு முயன்று வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டபூர்வ நடவடிக்கை என்னென்ன எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை நீங்களெல்லாம் மிகவும் நன்றாகவே அறிவீர்கள். ஆகவே, தொடர்ந்து சட்டபூர்வ நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உறுதி கொண்டிருக்கின்றார்கள் என்பதனை இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள். (குறுக்கீடு)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவையிலிருந்து வெளியேறினார்.)

திரு. கே. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்பன், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை தற்போது உச்ச நீதிமன்றத்தில் இருக்கிறது. இதுகுறித்து மீண்டும் நாம் விவாதத்திற்குள்ளே போனால், பல விஷயங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் பேசி, அந்தப் பிரச்சினை பூதாகரமாக வெடிப்பதற்குரிய வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினையை மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டபூர்வமாக அணுகுவார்கள் என்பதனை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்)

[2016 ஜனவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார். அதுபற்றி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்ற காரணத்தினால், அதுகுறித்து மேலும் விவாதம் வேண்டாம். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதுசம்பந்தமாக தேவையில்லை, விட்டுவிடுங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்பன் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள்.*

திரு. கே. குப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2016 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 20 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு@ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்"

என்னும் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தீர்மானத்தை வழிமொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள், மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு நன்றி தெரிவித்து முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.*

@ 267 முதல் 304 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.